ஞாலகுருவின் படைப்புக்கள்

# அருளுலகக் கல்வித் திட்டமே மெய்யான இந்துமதம்



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்.
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரணோடையில் கோயில் கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு **43,73,121** மார்கழி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை ரூ.10

# <u>உள்ளுறை</u>

1. **"செயல்விளக்க ஊக்க ஆக்கத் திருவோலை"** - குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் இராசிபுரம் சித்தரடியான் அருள்மிகு ஏகலைவன் சன்னிதானம் அவர்களுக்கு 20-11-1986இல் அருட்கல்வித் திட்டத்தை விவரித்து வரைந்த திருவோலை.

2. **"கருத்து விளக்கமும் செயல் ஊக்கமும் வழங்கும் திருவோலை"** - குருதேவர் ஞாஞச்சாரியார் அவர்கள் இராசிபுரம் வட்டார மாட்டுவேலம்பட்டிச் சித்தரடியான் அருள்மிகு பவானியம்மன் சன்னிதானம் அவர்களுக்கு 18-11-1986இல் தனிமனித வளர்ச்சியின் அவசியத்தை விளக்கி விடுத்த விரிவான திருவோலை.

3. **"சமயத் திருப்பணி மடல்"** - பங்களூரு கங்கணப்பள்ளியில் இராசராசேசுவரி கோயிலைச் சார்ந்த அருள்மிகு திருச்சி சுவாமிகள் அவர்களுக்கு 1987இல் குருதேவர் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் தம்மோடு இணைந்து செயல்பட அழைத்து விடுத்த மடல்.

4. **"மதத்தின் பெயரால் உள்ள கட்சிகள் பற்றி குருதேவர் கூறிய கருத்துக்கள்"** - குருதேவரின் அடியொற்றி வாழுபவர்களுக்கு இன்றைய நிலையில் மதத்தைச் சொல்லி வளரும் கட்சியினர்களை எடைபோடவும், புரிந்து கொள்ளவும் உதவும் கருத்துக்கள்.

செம்பியம்,
20.11.86.

# செயல்விளக்க ஊக்க ஆக்கத் திருவோலை

அருள்மிகு சிதம்பர நடராசர் சன்னிதானம், அருள்மிகு ஏகலைவன் சன்னிதானம் சித்தரடியார் திரு K.இராசமாணிக்கம் (கச்சேரித் தெரு, இராசிபுரம் PO, சேலம் Dt.) அவர்கள் சமூகத்திற்கு;

இ.ம.இ. தலைவர் குருதேவர், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், அருளாட்சி நாயகம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம்;

இராசிபுர வட்டாரத்தார் ஆற்ற வேண்டிய செயல்நிலை விளக்கமும்; ஆற்றியுள்ள செயல்களுக்கு விளக்கமும், பாராட்டும், ஆக்கச் சிந்தனைப் போக்கும் நல்கும் நலம் நாடும் திருவோலை.

1) தங்களின் 19.11.86ஆம் தேதியிட்ட அஞ்சல் கிடைத்தது. அனுப்பிய செய்திகளுக்கு மகிழ்கிறோம், பாராட்டுகிறோம்.

2) எமது அஞ்சலில் இருப்பதுபோல் ஒவ்வொரு பாராவிற்கும் வரிசை எண் முறையாகக் குறித்துத்தான் எதை எழுதினாலும் எழுத வேண்டும். இதேபோல் யாராக இருந்தாலும், அன்றாடம் அவரவர் வசதிப்பட்ட நேரத்தில் சிவபுராணத்தைப் பாடி காயந்திரி மந்தரம், மந்திரம், அருட்சினை மந்திறம் ஓதிடல் வேண்டும். பிறகு அவரவர்க்கு விருப்பமான ஏதேனும் ஒரு காயந்திரி மந்தரத்தைத் தங்களுடைய அருட்பட்டங்களோடு சேர்த்துச் சொல்லி சித்தி செய்து கொள்ள வேண்டும்.

3) இதேபோல் ஒரு கிராமத்திலோ அல்லது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திலோ அல்லது ஒரு பெரிய ஊரிலோ வாழுகின்ற நமது இயக்கத்தவர்கள் கட்டாயமாக ஏதேனும் ஒரு பொது இடத்தில் அல்லது யாருக்காவது சொந்தமான இடத்தில் புதிதாக யாகசாலை அமைத்து மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றி, நமது அமுதத் தமிழிலுள்ள பூசாவாசகங்களைச் சொல்லி, யாகம் செய்து பலிகொடுத்துப் படையலிட்டு, வாரத்தில் ஏதேனும் ஒரு நாள் அருளை அநுபவப் பொருளாக வழங்க வேண்டும். அப்பொழுதுதான் நம்மவர்கள் அருளுலக வாழ்க்கையில் தேவையான பயிற்சிகளைப் பெற்றவர்கள் ஆவார்கள். அதாவது தண்ணீருக்குள் இறங்கினால்தான் நீச்சல் கற்றுக் கொள்ள முடியும் என்பது போல்; நம்மவர்கள் அ.வி.தி. நிலையம் அமைத்து அருளை அநுபவப் பொருளாக வழங்கினால்தான் அருளைப் பெற முடியும். இப்படிச் செயல்படாதவர்கள் அருளுலகில் தேர்ச்சிகளைப் பெற்று முதிர்ச்சிகளை அடைய முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது. இதுவே **அ.வி.தி. நிலைய வழிபாடு**.

4) **ஆலய வழிபாடு:-** அதாவது ஒரு குறிப்பிட்ட வட்டாரத்திலுள்ள கருவறைகள், வெட்டவெளிக் கருவறைகள், வழிபாட்டு நிலையங்கள் அனைத்தையும் ஒரு பருவ பூசையிலிருந்து மற்றொரு பருவ பூசைக் காலத்திற்குள் நமது இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் மொத்தத்தில் முக்கால் வாசிப் பேர்களுக்கு மேல் ஒன்றுதிரண்டு கூட்டமாகச் சென்று சிவபுராணம் பாடி, போற்றி வாசகங்கள் கூறி, புத்துயிர்ப்பு மந்திறம் கூறி இறுதியாக காயந்திரி மந்தரம், மந்திரம், அருட்சினை மந்திறம் முதலியவைகளையும் கூறி மேற்படி அனைத்து இடங்களிலும் அருள் ஊற்றெடுக்கும்படிச் செய்ய வேண்டும். அதாவது இறைத்த கிணறுதான் ஊறும் என்பது போல; அந்தந்த வட்டாரத்தில் உள்ள அனைத்துக் கருவறைகளிலிருந்தும் அருளை வெளிக் கொணர்ந்து பொதுமக்களுக்கு வழங்கினால்தான் அருள் ஊற்றெடுத்திடும். இதன்பிறகு

குடமுழுக்கே எதற்கும் தேவைப்படாது. அதாவது நாமே புத்துயிர்ப்புப் பணிகளைச் செய்து கொள்கிறோம்.

5) **<u>சோதி வழிபாடு அல்லது இடுகாட்டுச் சுடுகாட்டுப் பூசை</u>:-** நம்மவர்கள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள பதினெட்டு வகைக் காடுகளில் இடுகாடு, சுடுகாடு, புதைகாடு எனும் மூன்று காடுகளுக்காவது வாரத்தில் ஒரு நாளாவது சென்று பூசைகள் செய்து சுடலைக்குரிய ஈசுவரன் ஈசுவரி, ஆண்டி ஆண்டிச்சி, கபாலிகன் கபாலி, திரிசூலன் திரிசூலி, பைரவன் பைரவி, காளியம்மன் காளியப்பன், காடுகிழாள் காடுகிழான், மோகன் மோகினி, இடாகன் இடாகினி, பிடாரன் பிடாரி, இயக்கன் இயக்கி, ... எனப்படுபவர் சிலரையாவது எழுப்பி அருளாட்சி பற்றிய அறிவிப்புகளை வழங்கி கூளிகளையும், காற்றுக்களையும், கருப்புக்களையும், பேய்களையும், பிசாசுகளையும், பூதங்களையும், இராக்காச்சிகளையும் ... அருட்போருக்குத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்குமாறு செய்திடலாம். இப்படிச் செய்வதன் மூலம்தான் அருளாட்சி அமைப்புப் பணியில் முழுமையாக ஈடுபடுபவர்கள் ஆகிடுவோம் நாம்.

அதாவது வேட்டைக்குப் போக விரும்புகிறவன் நாட்டுக்கும், காட்டுக்கும் உள்ள எல்லா வேறுபாடுகளையும் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன், தான் வேட்டையாடப் போகின்ற பறவைகளையும், விலங்குகளையும் பற்றி நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். இவற்றுக்கெல்லாம் மேலாக வேட்டைக்காகத் தான் எடுத்துப் போகும் ஆயுதங்களைப் பற்றியும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். **அதுபோல நம்மவர்களுக்கு அருளுலகத்துக்கும், பொருளுலகத்துக்கும் உள்ள வேறுபாடு தெரிந்திருக்க வேண்டும்**. அருளுலகத்தில் உள்ள உருவங்கள், அருவங்கள், அருவுருவங்கள், 48 வகை வழிபடு நிலையினர்கள், 48 வகை அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், 48 வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள்,

48 வகை அருட்பட்டத்தவர்கள், எண்வகை ஆச்சாரியார்கள், 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், 13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள், 48 வகைப் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள், தாத்தாக்கள், ஆத்தாக்கள், அம்மையப்பன்கள், இந்த அருளுலக வேந்தர்களான பதினெண்சித்தர்கள், இம்மண்ணுலக அருளாட்சி நாயகங்களான பதினெண்சித்தர் பீடாதிபதிகள், ... முதலியவர்களைப் பற்றியெல்லாம் தெரிந்திருக்க வேண்டும்.

இவற்றுக்கெல்லாம் மேலாக இந்த அருளுலகில் நுழைவதற்குத் தேவையான பயிற்சிகளுக்கும், முயற்சிகளுக்கும் சாதனங்களான (ஆயுதங்கள் அல்லது கருவிகள் The Instruments or tools and weapons) பூசா விதிகள், பூசா மொழிகள், பூசை மரபுகள், பூசைப் படிகள், பூசை சட்டதிட்டக் கட்டுப்பாடுகள், பூசை ஒழுகலாறுகள், பூசைப் பழக்கவழக்கங்கள், பூசைப் பாரம்பரியங்கள், பூசை மறைகள், பூசை முறைகள், பூசை நெறிகள், பூசை வேதங்கள், பூசைச் சித்தங்கள், பூசை நாதங்கள், பூசை ஓதங்கள், பூசைச் சுருதிகள், பூசை ஆரண ஆகம மீமாம்சைகள், பூசை நேம நியம நிடத நிட்டை நீதிகள், பூசைச் சூத்தர, சூத்திற, சூத்திரங்கள், பூசைத் தோத்தர, தோத்திற, தோத்திரங்கள், பூசைச் சாத்தர, சாத்திற, சாத்திரங்கள், ... முதலிய எண்ணற்ற அறிவியல்களையும், அருட்கலைகள் நாற்பத்தெட்டையும், ஆயகலைகள் அறுபத்து நான்கினையும், தத்துவங்கள் தொண்ணூற்றுறினையும், திருப்பதிகள் 108ஐயும், சத்திபீடங்கள் 243ஐயும், சிவாலயங்கள் 1008ஐயும் நன்கு நுட்பதிட்ப ஒட்பமாகத் தெரிந்து அறிந்து ஆராய்ந்து புரிந்து தெளிந்து உணர்ந்து நம்பி ஏற்றுப் போற்றிச் செயல்பட வேண்டும்.

<u>இதுதான் மெய்ஞ்ஞானக் கல்வித் திட்டம்</u>; <u>சாகாக் கல்வித் திட்டம்</u>; <u>வேகாத்தலையைப் பயன்படுத்தும் திட்டம்</u>; <u>போகாப் புனலில் புனலைப் பருகியும், போகாப் புனலில் நீராடியும், போகாப் புனலில்</u>

<u>நீந்தியும் அக்கரை சேரும் அருளுலகக் கல்வித் திட்டம்</u>. இப்படி முறையான ஏட்டறிவினையும் (The Theoretical Knowledge), பட்டறிவினையும் (The Practical Knowledge) வழங்கக் கூடிய **<u>மிகத் தெளிவான, முறையான, படிப்படியான பயிற்சிநிலைகளை உடைய ஓர் ஒப்புயர்வற்ற கல்வித் திட்டம்தான் பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதம்</u>**. (The True Indhuism of the Pathinen Siddhars is a well-defined and a systematised educational curricular system. And only this educational system has proper plans and highly useful schemes. So, this can alone eradicate all the ills and evils, destructions and drawbacks, blind superstitions and barbaric customs and manners, useless faiths, the dictatorism and swindlings, the curtaining systems and cheatings of the Religion.... - *taken from the writings of His Holiness Siddhar Kaakkaiyar Mr M.Palanisamy Pillai*).

இந்த மெய்ஞ்ஞானக் கல்வித் திட்டம் எனும் இந்துமதத்தால்தான் மதத் துறையிலுள்ள அனைத்து வகையான தேய் நிலைகளையும்; தீய, தேவையற்ற நிலைகளையும், ... முழுமையாக அகற்ற முடியும். இப்பேருண்மைதான் பதினெண்சித்தர்களின் மெய்ஞ்ஞான கல்வித் திட்டமான **மெய்யான இந்துமதம்**தான் இம்மண்ணுலகின் முதல்மதம், மூலமதம், தாய்மதம் என்ற தத்துவாதீதப் பேருண்மையை விளக்குகிறது. (The Rules and Regulations, conventions and traditions, the preachings and the practices, the relationship between the Guru and the disciples of the True Indhuism ... explain and establish the fact that the Pathinensiddhars' Philosophy and Theology are the Mother Liquor of all the religions.)

எனவே தமிழனாய்ப் பிறந்துள்ள ஒவ்வொருவனும் இம்மண்ணுலகில் தோன்றியுள்ள அனைத்து மதங்களுக்கும் தாயாக, வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழிப்பயனாக இருக்கின்ற

இந்துமதத்தைப் படித்தறிந்து கொள்ளவும், பயின்று புரிந்து கொள்ளவும் முன்வர வேண்டும், முன்வர வேண்டும், முன்வர வேண்டும். இதனை உணராமல் தமிழினத்தின் தலைவர்களாக விளங்குகின்ற பலரும் மதமறுப்பாளர்களாக, மதவெறுப்பாளர்களாக, மத-எதிர்ப்பாளர்களாக, மதத்தைப் பற்றி அக்கறையில்லாத நாத்திகர்களாக வாழ்ந்து வந்திட்ட காரணத்தினால்தான் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக தமிழினம் தொடர்ந்து அடிமைப்படுத்தப்பட்டும், அவமானப்படுத்தப் பட்டும், சிதைத்துச் சீரழிக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும், நலிந்து மெலிந்து கேவலமான வாழ்க்கை வாழ நேரிட்டு விட்டது. இதே நிலைதான் பெரும்பாலும் இந்தியத் துணைக்கண்டம் முழுதுமுள்ள சமயத் துறையிலும், அரசியல் துறையிலும் நிலவுகின்றது.

எனவே, இந்த நாட்டை ஆளுகின்ற தலைவர்களின் பாரம்பரியங்களையும், தனிப் பண்புகளையும், ஆற்றல்களையும் ஆராய்ந்தறிந்து, புகழ்ந்து, போற்றிக் கொண்டு நடத்தும் அரசியலை விட்டுவிட்டு; உடனடியாக இந்த நாட்டின் பண்பாட்டுக்கும், நாகரீகத்துக்கும், தனிமனித வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும், சமுதாய வாழ்வுக்கும், அரசியல் வாழ்வுக்கும் மூலமாக, முதலாக, தாயாக, அடிப்படையாக, உள்ளீடாக, உயிராக, இயக்கச் சத்தியாக, ... இருக்கின்ற தத்துவம் எது? அந்தத் தத்துவத்தின் நாயகர்கள் யார் யார்? அவர்களின் வரலாறுகளும், வாழ்வியல் போதனைகளும் சாதனைகளும் என்னென்ன? அவற்றிற்கெல்லாம் எப்போது? எப்படி? எவரெவரால் வீழ்ச்சிகள் உண்டாக்கப்பட்டன? அந்த வீழ்ச்சிகளால் விளைந்த தாழ்ச்சிகள் என்னென்ன? அந்த தாழ்ச்சிகளில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு மீட்சிநிலையை விளைவித்திட என்னென்ன செய்ய வேண்டும்? ... என்பன போன்ற வினாக்களை எழுப்பி விடை தேடிச் சிந்திக்கக் கூடியவர்கள் விரல்விட்டு எண்ணிடக் கூடிய சிலராகவோ, பலராகவோ உருவாகிடல் வேண்டும்! உருவாகிடல்

வேண்டும்! உருவாகிடல் வேண்டும்! இல்லையேல் உருவாக்கப்பட்டிடல் வேண்டும்!

இதுதான் அருளுலக அரியணையில் அருட்பேரரசராக முடிசூட்டி அருளாட்சி நடத்தப் புறப்பட்டிருக்கும் அருளாட்சி நாயகத்தின் பணிநிலை; இதனை உணரக் கூடிய அல்லது உணர்த்தக் கூடிய தொண்டர்களை உருவாக்கும் பணியிலேயே அரை நூற்றாண்டுக் காலத்தை செலவழிக்கிறோம் யாம். எனவேதான், யாம் தங்களை ஒரு முடிவெட்டும் தொழிலாளி, சிகையலங்கரிக்கும் பணியாள், ஒரு சிற்றூர் மனிதன், ... என்றெல்லாம் வேற்றுமைப்படுத்தி எண்ணாமல் நெடிய பல கருத்து விளக்க அஞ்சல்களையும், பூசைக்குரிய ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகச் சத்திகள் அடங்கிய சாதனங்களையும் வழங்கி வருகிறோம்.

ஆனால் தாங்களோ எம்மைச் சந்தித்தும், சிந்திக்காமல் *பார்பர் ஷாப்* என்றும், *P.Rajamanickam* என்றும் ஆங்கில மொழிக்கு அடிமையாகக் கிடக்கிறீர்கள். தாய்மொழியில் பற்றும், பாசமும், உரிமையும், பெருமையும் இல்லாத செயல்களில் ஈடுபடுவது **“கண்ணை விற்று ஓவியம் வாங்குவோன் கதியேயாகும்”** என்ற குருபாரம்பரிய வாசகத்தை மட்டும் உங்கள் நிலைக்கு விளக்கமாக வழங்குகிறோம். இதற்காக நீங்கள் வருந்தினாலும் சரி, வெறுப்புற்றாலும் சரி; தங்களைப் போன்ற அரசியல்வாதிகளின் தாய்மொழிப் பற்றின்மையால்தான் தமிழர்கள் ஒற்றுமைப்பட முடியவில்லை, ஒருமையுணர்வு பெற முடியவில்லை. அன்னியர்களிடம் கூலிகளாகவும், கங்காணிகளாகவும், காவடிகளாகவும், கைகால் அமுக்குபவர்களாகவும், செருப்புத் தூக்குபவர்களாகவும் வாழுகின்ற அவலக் கேவல நிலை நீங்கவில்லை.

எனவே, இந்த அஞ்சல் கண்ட நொடி முதல் தாங்கள் முழுக்க முழுக்க தமிழ்மொழி வழியாகச் செயல்படக் கூடியவர்களாக மாறுங்கள்! மாறுங்கள்! மாறுங்கள்! இல்லாவிட்டால், உங்களை நீங்களே ஏமாற்றிக்

கொள்வதுடன் மற்றவரிடம் ஏமாறும் கோமாளிகளாக ஆகிவிடுவீர்கள். எச்சரிக்கை! எச்சரிக்கை! எச்சரிக்கை! இந்தக் கருத்துதான் எமது நூற்றுக்கணக்கான நூல்களிலும், பல நூறுயிரக்கணக்கான அஞ்சல்களிலும், எமது நாளோலக்க அறிவுரைகளிலும், அருளுரைகளிலும், எமது திருவோலக்க அருளார்ந்த அறிவுரைகளிலும், அறிவார்ந்த அருளுரைகளிலும் ... தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகிறது! வெளியிடப்பட்டு வருகிறது! வெளியிடப்பட்டு வருகிறது!

ஆனாலும், தங்களைப் போன்றவர்கள் இருட்டை விட்டு வெளியே வரவும் மாட்டேன் என்கிறீர்கள்; தங்களுக்குள் இருக்கும் இருட்டை அகற்றுவதற்கு எம்மை அனுமதிக்கவும் மாட்டேன் என்கிறீர்கள். எனவேதான், யாம் சிந்தை நொந்தும், நெஞ்சம் வெந்தும், உணர்வு நைந்தும்,

"ஏ! தாழ்த்தப்பட்ட தமிழினமே! தாழ்ந்து கிடக்கின்ற தமிழினமே!
நீ இன்னும் எவ்வளவு காலம் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கப் போகிறாய்?
உன்னுடைய பாரம்பரியக் குருபீடம் வந்திருக்கிறோம்!
உன்னுடைய அக இருளையும், புற இருளையும் அகற்றக் கூடிய அருளாட்சி நாயகம் வந்திருக்கிறோம்!
நீ குற்றுயிரும், குலையுயிருமாக இருக்கின்ற நிலைகளை மாற்றும் வல்லமை பெற்ற குவலய குருபீடம் வந்திருக்கிறோம்!
உன் ஏக்கங்களைப் போக்கும் குருதேவர் வந்திருக்கிறோம்!
உன் நோக்கங்களை நிறைவேற்றித் தரக்கூடிய அரசயோகி வந்திருக்கிறோம்!
உன்னை விண்ணுயர்ந்த செம்மாந்த வாழ்க்கை வாழச் செய்யும் அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் வந்திருக்கிறோம்!
நீ விழிச்சி பெறு! விழிச்சி பெறு! விழிச்சி பெறு! எழிச்சி பெறு! எழிச்சி பெறு! எழிச்சி பெறு!
மலர்ச்சிமிகு செழிச்சி பெறத் தயாராகு! தயாராகு! தயாராகு!

வளர்ச்சிமிகு கிளர்ச்சி செய்யப் புறப்படு! புறப்படு! புறப்படு!
முழுமையான பண்பாட்டுப் புரட்சி செய்யப் பயிற்சி பெறு! பயிற்சி பெறு! பயிற்சி பெறு!
அனைத்தையும் அன்பு வழியில், அற வழியில், அமைதி வழியில், சமாதான வழியில் நிதானமாகச் செய்திட அருளுலக முயற்சிகளை முறையாகவும், நிறையாகவும் பெற்றுக் கொள்ள முன்வந்திடு! முன்வந்திடு! முன்வந்திடு!
உன் தாயினத்தின் தத்துவ வித்தக வாரிசு வந்திருக்கிறோம்! வந்திருக்கிறோம்! வந்திருக்கிறோம்!
இவற்றை உணர்ந்திடு! உணர்த்திடு! உணர்ந்து உணர்த்திடு! உணர்ந்து உணர்த்திடு! உணர்ந்து உணர்த்திடு! புரிந்து புரியவைத்திடு! புரிந்து புரியவைத்திடு! புரிந்து புரியவைத்திடு!"

என்று அழைப்பு விடுக்கின்றோம்.

6) அன்புத் தோழ! நண்ப! தங்களைப் போன்றோர் தாழ்வு மனப்பான்மையோ, தளர்வு மனப்பான்மையோ பெற்றிருக்கக் கூடாது! என்பதற்காகத்தான் யாம் நேரில் தங்களிடம்,

"<u>அம்பட்டர்</u> ***(அம் = அழகிய, பட்டர் = தொழிலாளி => அழகுக் கலைத் தொழிலாளி அல்லது பிறரை அழகுபடுத்தும் தொழிலாளி)*** என்பவரும், <u>வண்ணார்</u> ***(வண்ணங்களையுடைய வகைவகையான துணிகளை பிறர் உடுத்தி வாழ வழிவகை செய்யும் தொழிலாளி; துணியின் வண்ணங்கள் சிதையாமல் பாதுகாக்கும் ஆர்வமுடைய அக்கறையுடைய தொழிலாளி)*** என்பவரும் ஆகிய இரு தொழிலாளிகள்தான் விண்ணூர்ந்த வாழ்வின் கண் போன்றவர்கள். இவர்களைக் கைகளாகக் கொண்டுதான் சோழப் பேரரசு *(பிற்காலச் சோழப்பேரரசு கி.பி.785-கி.பி.1279)* எனும் அருட்பேரரசு உருவாக்கப்பட்டது.

இதனைக் கருத்தில் கொள்ளாமல் மனித சமுதாயத்தின் இயக்கத்திற்கு இரு கால்கள் போன்று இருக்கும் இவர்களைத் தாழ்த்தி ஆழ்த்தி

வீழ்த்தி அதன்மூலம்தான் பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் தங்களுடைய வேதமதமான *பொய்யான ஹிந்துமதத்*தின் சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளின் மூலமாகத் தமிழர்களை ஒற்றுமையற்றவர்களாக, தன்மான உணர்வற்றவர்களாக, இனப்பற்று அற்றவர்களாக, மொழிப்பற்று அற்றவர்களாக, வரலாற்றுப் பெருமித உணர்வு அற்றவர்களாக, விடுதலையுணர்வு அற்றவர்களாக, நாட்டுரிமையுணர்வு அற்றவர்களாக, பண்பாட்டுப் பாரம்பரிய பிடிப்பற்றவர்களாக, நாகரீகக் கூறுபாடுகளைக் காக்கும் நாட்டமற்றவர்களாக, இலக்கிய அறிவற்ற கருத்துக் குருடர்களாக, மத உணர்வற்ற விலங்குகளாக, ஆன்மீகப் பயிற்சி அற்ற அனாதைகளாக, ... மாற்றி விட்டார்கள். எனவே, அம்பட்டரையும், வண்ணாரையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தித்தான் தமிழின விடுதலைப் போரை நிகழ்த்த வேண்டும்! நிகழ்த்த வேண்டும்! நிகழ்த்த வேண்டும்!...”

என்ற பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரிய வாசகங்களைத் தங்களிடம் விளக்கிக் கூறினோம் யாம்.

இப்பொழுது நீங்கள் இவற்றை அச்சுப் போட்டே தமிழகம் முழுதும் உள்ள முடிவெட்டும் தொழிலாளர்களுக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் வழங்குகின்ற அளவிற்கு எழுதியனுப்புகிறோம். இந்த அஞ்சலில் நீங்களாவது இந்த இரு சமூகத்தார்களையும் ஒன்றுதிரட்டி, பெரும்பாலான கருத்துக் குருடர்களையும், கருத்துத் திருடர்களையும் திருத்த முற்படுங்கள். தாழ்வு மனப்பான்மைகளை அகற்றுங்கள், அகற்ற முற்படுங்கள்! சிங்கமே! குகையை விட்டு வெளியே வந்து சிந்திக்கக் கற்றுக் கொள், சிந்திக்கக் கற்றுக் கொடு.

7) நண்ப! தாங்கள் திருச்சிக்கும், மதுரைக்கும், வேலூருக்கும் நேரில் வந்து ஆர்வமோடு செயல்பட்டமையைப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். அண்மையில் 16.11.86 முதல் 18.11.86 முடிய

நமது அ.வி.தி. தலைமைச் செயலாளர் வீரமாகாளி சன்னிதானம் அவர்களும், அ.வி.தி. செயல்வீரர்கள் அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் அவர்களும், அருள்மிகு தஞ்சைப் பெருவுடையார் சன்னிதானம் சோ.இரவீந்திரன் அவர்களும் மேற்கொண்ட சேலம் மாவட்டச் சுற்றுப்பயணத்தில் ஆற்றிய அரும்பெரும் பணிகளை வாழ்த்துகிறோம், பாராட்டுகிறோம்! இப்பொழுது அங்குத் தங்கியிருக்கும் சித்தர் மகன் சித்தரடியார் அருள்மிகு தஞ்சைப் பெருவுடையார் சன்னிதானம் திரு சோ.இரவீந்திரன் அவர்களைத் தாங்களும், மற்ற நண்பர்களும் நன்கு பயன்படுத்தி; இராசிபுரத்திலும், அதன் சுற்று வட்டாரங்களிலும், அருளாட்சி முயற்சிக்குக் கண்போன்ற அ.வி.தி. நிலையங்களையும், இ.ம.இ. கிளையமைப்புக்களையும் எண்ணற்று உருவாக்குங்கள்! எண்ணற்று உருவாக்குங்கள்! எண்ணற்று உருவாக்குங்கள்! என்று கூறி இவ்வஞ்சலை நிறைவு செய்கிறோம்.

**குருமகாசன்னிதானம்,**

**ஞாலகுரு சித்தர் கருவூரூர்.**

<u>திருவோலை நாயகம்:</u>

இன்றைய தலைமைப்பீட தலைமைப் பணியாளர்களுள் ஒருவராகிய இளந்துறவி சுந்தரானந்தா, 21.11.86.

**<u>நகலெடுத்தவர்</u>**:-

அருள்மிகு தேவதானப்பட்டி தேவி காமாட்சியம்மன் சன்னிதானம் சித்தர் மகன், சிவயோகி வெ.செகதீசன், மதுரை-10.

**//உண்மை நகல்//**

**// இதன் மூல நகல் : சித்தரடியான் திரு வெ.செகதீசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

ஓம் குருவே துணை!

தலைமைப்பீடம்,
செம்பியம்,
18-11-86.

# கருத்து விளக்கமும் செயல் ஊக்கமும் வழங்கும் திருவோலை

1) அருள்மிகு சேலம் பெரியவாள், சோமகோடி பீடாதிபதி, அஞுதிசங்கராச்சாரியார் ஆதீனம், அருள்மிகு பவானியம்மன் சன்னிதானம், தெய்வீகாச்சாரியார், அருள்மிகு கொங்கண சித்தர் தம்பிரான், சமயக்குரவர் மாணிக்கவாசக அடிகளார் எழுந்தருளி, அருள்மிகு சௌடாம்பிகையம்மன் அருளாடு நாயகம், பத்துக்கரமுடைய பகவதியம்மன் மடாதிபதி, சித்தரடியார் சு. ஞானசேகரன் B.A., அவர்கள் சமூகத்திற்கு;

18.11.1986இல் அருட்பட்டங்களை உறுதி செய்து சேலம் மாவட்டச் செயலாளர்களுள் ஒருவர் என்ற பதவியில் சிறப்பாகச் செயலாற்றி வருவதைப் போற்றும் குருவாணை இது.

இந்தக் குருவாணை மடலின் நகலை அ.வி.தி. தலைமைச் செயலாளர் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன் பரமாச்சாரியார் (C/O காதி வசுத்திராலயம் G.R.N.S. கொட்டாம்பட்டி P.O., மேலூர் Tk, மதுரை Dt.-625103) அவர்களுக்கு அனுப்பி அருளாட்சித் தாக்கீது பெற்றுக் கொள்ளுங்கள். இதற்குரிய பூசைச் செலவிற்காக ரூ.50/-ஐ அவருக்கு அனுப்புங்கள். நீங்கள் நேரில் செல்லும்போது அருள்மலையின் மீது இந்த அருட்பட்டங்களுக்குரிய அறிவிப்பும், பூசையும் செய்து வைப்பார் அவர்.

இந்தத் திருவோலைக்கு ஒரு பேனா நகலும், மூன்று கார்பன் நகல்களும் எடுத்துத் தலைமைப்பீடத்திற்கு அனுப்புங்கள். இதேபோல், சேலம் மாவட்டத் தலைமை அ.வி.தி. செயலகமாக இருக்கின்ற வேம்படிதாளம் தருகுலம் சீ.மணிக்கும், இராசிபுரத்திற்கும், வேலூர் திருகுலத்திற்கும், கோயமுத்தூர் சிறுமுகைக்கும், மதுரை M.S.R.மாரியப்பன் அவர்களுக்கும், நாமக்கல் பொன்னுசாமி அவர்களுக்கும் நகல் அனுப்புங்கள். மற்ற விவரங்களுக்கு இந்த அஞ்சலுடன் வேம்படிதாளம் சென்று சீ.மணியிடம் அறிவுரை பெறுங்கள். மேலும், தாங்கள் சேலம் மாவட்டச் செயலாளர்களுள் ஒருவர் என்பதால் புதிதாகச் சேருபவர்களுக்கெல்லாம் இந்த அஞ்சலின் நகல் தருவது நல்லது. வெற்றியுண்டாகட்டும்.

2) பேரார்வமும் பெருந்திறலும் உடைய இனிய நண்பர் ஞானசேகரன் அவர்களே! தாங்கள் ரூ.300/- அனுப்பியதற்கு ஏற்பத் தலைமைப்பீடத்திலிருந்து அச்சிட்ட நூல்களின் பிறதிகள் அனைத்தையும் அனுப்பி வைத்தோம். அதுபற்றி இன்று வரை நேரடியான பதில் இல்லை. அவை கிடைத்தனவா? தாங்கள் அவற்றைப் படித்தறிந்தீர்களா? அந்த அச்சிட்ட வெளியீடுகள் இச்சைக்குரியனவாக இருந்தனவா? அச்சத்திற்குரியனவாக இருந்தனவா? அதில் தாங்கள் கண்ட குறை நிறை என்னென்ன? என்பனவற்றை அன்பு கூர்ந்து விரைந்து விரிந்து எழுதி அனுப்பவும்.

3) தொண்டுள்ளம் நிறைந்த தோழ! மாட்டுக்காரன் வேலன்பட்டி போன்ற குக்கிராமங்களில்தான் தாய்மொழியான தமிழைக் காப்பாற்ற, தாய்நாட்டைக் காப்பாற்றக் கூடிய மாவீரம் மிக்கவர்களும், சிந்தனை மிக்க மாமேதைகளும் நீறுபூத்த நெருப்புப் போல், ஆழ்கடலிடை முத்துப் போல், மலைமுகட்டுச் சந்தன மரம் போல், மலைச்சாரல் காட்டு வேங்கை போல் வாழுகிறார்கள் என்ற பேருண்மைக்கு

தாங்கள் மிகச் சான்ருகவும் ஊன்ருகவும் விளங்குகின்றீர்கள். நன்றி, மகிழ்ச்சி, பாராட்டு.

4) தாங்கள் எம்மைக் காணப் பேரார்வத்துடன் குருகுலம் வந்திருந்த செய்தியை அறிந்தோம். மிக்க மகிழ்ச்சி, நன்றி, பாராட்டு. யாம் குருபாரம்பரிய மரபுகளையெல்லாம் மீறியும், மாறியும், விதிவிலக்குக் கண்டுபிடித்தும் எமது விருப்பம் போல் மறைகளை (Secrets) எல்லாம் மக்களின் உய்வுக்காக வெளியிட்டுச் செயல்படுவதால் அடிக்கடி அருளுலகத்தாரின் கண்டிப்புக்கும், தண்டிப்புக்கும் உள்ளாகித் துன்புறுகின்ருேம். இருந்தாலும் யாம், 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற சித்தர்நெறித் தத்துவப்படியே செயல்படுகிருேம். இதனைக் கட்டாயமாக எம் காலத்து மக்கள் உணருவார்கள், உணர்த்துவார்கள்.

எல்லோரும் யாம் மொழி வெறி, சாதி வெறி, இன வெறி, நாட்டு வெறி, தமிழ்ப் பண்பாட்டு வெறி, தமிழ்ச் சமய வெறி, தமிழ் நாகரீக வெறி, தமிழ்த் தத்துவ வெறி, தமிழ்க் கலை வெறி முதலிய பல வெறிகளால் பெருங்கடலலை போல் வெறி கொண்டு சீறிப் பாய்ந்து எப்போதும் அலைந்து திரிவதாகக் கருதுகிருர்கள். யாம் இது பற்றி ஊசிமுனை அளவு கூடக் கருதிப் பார்த்ததில்லை. ஏனெனில், உண்மைகளைப் பொய்கள் ஆளுமாறு விட்டுவிடக் கூடாது என்ற மூதுரையையும்; தூய்மையையும், வாய்மையையும், துய்ப்பையும் கெடுப்பவர்களைத் தடுக்காதவர்களுக்கு உய்வில்லை என்ற மூதுரையையும் நினைவில் கொண்டு; எமது தாய்நாட்டு வாய்மைகளையும், தூய்மைகளையும் பாதுகாக்க இரவுபகலாகப் போர்க்கோலம் பூண்டு அலைகிருேம்.

அதாவது, யாம் மதவாதிதான், ஆனுல் மிதவாதியல்ல என்பது பலரின் கருத்து.

5) தாங்கள் குருகுலத்தில் பூசைக்கு வரும் அனைவரிடமுமே நமது கொள்கை விளக்கங்களையோ, குறிக்கோள் நோக்கங்களையோ

கூறுமல் நமது சன்னிதானங்களுக்கிடையில் மட்டும் கூற வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தீர்கள். இது நல்ல கருத்துதான், பாராட்டுகிறோம். ஆனுல், இக்கருத்து நாம் முழுமையாக வளர்ந்து கருத்துப் புரட்சிக்குத் தயாரான பின்னர்தான் இது சரியாகும். ஆனுல், இப்பொழுது நாமோ மிகமிக ஆரம்பக் கட்டத்தில்தான் இருக்கிறோம்.

அதாவது, பெரிய கடலிலே தூண்டில் போட்டு மீன் பிடிப்பவர்களைப் போல நாம் மொழி இன நாட்டுத் துரோகிகளும், விரோதிகளும், கூலிகளும், போலிகளும், கருங்காலிகளும், அன்னியரின் கங்காணிகளும், கைக்கூலிகளும், அடிமைச் சிந்தையுடையவர்களும் மிகுந்த தாயகத்தில்; மெய்யான, தூய்மையான, வாய்மையான, நல்ல வீரமிக்க தமிழர்களைத் தேடிக் கொண்டிருக்கிறோம். எனவேதான் கூட்டம் கூடுகின்ற இடங்களில் எல்லாம் நமது கருத்துக்களைக் கூறித் தூண்டில் போடுகின்றோம். அது தவறில்லை.

ஆனுல், தாங்கள் கூறியது போல் தூண்டில் முள்ளில் உள்ள இரையை மட்டும் தின்று விட்டு ஓடுகின்ற மீன்கள்தான் அதிகமாக உள்ளன. இதற்காக நாம் சளைக்கக் கூடாது, சளைக்கக் கூடாது, சளைக்கக் கூடாது; அயர்ச்சியடையக் கூடாது, அயர்ச்சியடையக் கூடாது, அயர்ச்சியடையக் கூடாது; தளர்ச்சியடையக் கூடாது, தளர்ச்சியடையக் கூடாது, தளர்ச்சியடையக் கூடாது; தொடர்ந்து முயற்சிகளைச் செய்து கொண்டேதான் இருக்க வேண்டும். இதுதான் நமது சித்தாந்தம். பேரன்பு கூர்ந்து தொலைநோக்குச் சிந்தனைகளோடு இவற்றை ஆய்ந்து புரிந்து தங்களுடைய கருத்தை மீண்டும் தெரிவியுங்கள்.

தாங்கள் முழு உரிமையோடு தங்களுடைய கருத்தைத் தெரிவிக்கலாம். ஏனெனில், யாம் அறிவார்ந்த அருள்வாழ்க்கை வாழுகிறோம். எமது பாரம்பரியமோ அருளார்ந்த அறிவு நிரம்பியது.

எனவே, யாம் அருளுலகிலும், அறிவுலகிலும் "முல்லையே, மலராதே! முழுநிலவே, ஒளிராதே! நண்பனே, சிந்திக்காதே! தோழனே, ஐயங்களைக் கேட்காதே!" என்ற கருத்துப் போக்கிலோ, செயல் நோக்கிலோ வாழவில்லை, வாழவில்லை, வாழவில்லை, வாழவேயில்லை என்பதை இனியாவது புரிந்து கொள்ளுங்கள்.

எனவே, தாங்கள் இனிமேல் எதையும் ஏன்? எதற்கு? எப்படி? எவ்வாறு? எதற்காக? என்ன பயன் கருதி? என்றெல்லாம் வினவெழுப்பிச் சிந்தித்து எமக்கு உறுதுணையாக இருந்திட வேண்டும். ஏனெனில், 'இடிப்பாரை யில்லா ஏமரா மன்னன் கெடுப்பாரிலானும் கெடும்' என்ற திருக்குறளை யாமும் தாங்களும் உணர்ந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் நம்மால் இன விடுதலை, மொழி விடுதலை, பண்பாட்டு விடுதலை, நாகரீக விடுதலை முதலிய பல விடுதலைகளுக்குப் பாடுபட முடியும். தங்களின் தோழமையையும், தொண்டுள்ளத்தையும், அறிவார்ந்த நட்பையும் பெரிதும் மதிக்கின்றோம், ஏற்றுப் போற்றுகின்றோம். இதனைப் புரிந்து எம்மோடு தொடர்ந்து செயல்பட முற்படுங்கள்.

6) தாங்கள் வடஆற்காடு மாவட்டத் திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரியில் புதுமுக வகுப்பு படித்ததாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். யாமும் 1956 முதல் 58 வரை அதே கல்லூரியில் பாதர் மர்பி முதல்வராக இருந்தபோது கணிதவியல் இளங்கலைப் பட்ட வகுப்புப் படித்தோம். எனவே, தாங்கள் ஒருவேளை எம்மை அங்குச் சந்தித்தீர்களோ? விவரம் தேவை.

7) தாங்கள் தூயநெஞ்சக் கல்லூரியில் பேச்சுப்போட்டியில் பேசிய கருத்துக்களை விட யாமே அக்கல்லூரி மாணாக்கரிடையேயும், ஆசிரியப் பெருமக்களிடையேயும், நிறுவன நிர்வாக கிறித்தவத் துறவிகளிடையேயும், இளந்துறவிகளிடையேயும், திருப்பத்தூர் வட்டார மக்களிடையேயும் காரசாரமான தீவிரக் கருத்துக்களைத் தீரமாகப் பேசியிருக்கிறோம்.

எனவேதான், தங்களுக்குக் கணிசமான ஆதரவு கிடைத்திருக்கும் என்று கூட எண்ணுகிறோம். எது எப்படியானாலும் சரியே! நீங்களும் யாமும் ஒத்த கருத்துடையவர்களே என்ற பேருண்மை இப்போது விளங்கி விட்டது. எனவே, இனிமேல் எப்போதும் நாம் இணைந்தே செயல்படுவோமாக, இணைந்தே செயல்படுவோமாக, இணைந்தே செயல்படுவோமாக. எனவே, நாம் வாழும் தொலைதூர இடைவெளியால் இனிமேல் நாம் பிரிக்கப்பட முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது.

8) நண்ப! எந்தை அச்சுப் போடப் பயந்த கையெழுத்துப் பிறதி நூல்கள் (The Manuscripts) ஏராளமாக எந்தையின் நண்பர்களிடத்தும் எம்மிடத்தும் உள்ளன. இவை நம் தாய்த்திருநாட்டில் எந்தை அரை நூற்றுண்டுக் காலத்துக்கு மேல் நிகழ்த்திய காகிதப் புரட்சியை (The Revolution of Manuscripts or The Paper Revolution) விளக்கிடும் சான்றுகளாகவும், ஊன்றுகளாகவும் இருக்கின்றன. அந்த உலக மாமேதை, சிந்தனைச் சிற்பி, புரட்சிச் சிங்கம், புத்துலக வித்துப் பண்ணை, அறிவுக் கடல், அருட் புனல், செயல் சூறுவளி, தெலுங்கானுப் புரட்சிக் கதாநாயகர், அஞ்சாநெஞ்சரே தோற்றுர், தோற்றுர், தோற்றுர் என்பதால்தான் யாம் இலைமறை காயாகவே செயல்படுகிறோம், செயல்படுகிறோம், செயல்படுகிறோம்.

இருந்தபோதிலும், எமக்கு நண்பராகத் தோழராகத் தொண்டராக வாரிசாக எண்ணற்ற இளஞ்சிங்கங்கள் கிடைத்தே வருகின்றன என்பதால்தான் யாம் அடிக்கடி குகையிலிருந்து வெளிப்படும் சிங்கம் போல் மின்னல் வீச்சுச் செயல்களைச் (The Lightning Efforts or Attempts) செய்கிறோம். இருந்தாலும் யாம்; எம்மைத் தாங்குவார்கள், எமக்கு அரணாக இருப்பார்கள், எமது கையில் வலிமையான ஆயுதமாக இருப்பார்கள் என்றெல்லாம் எண்ணியெண்ணி, நம்பி நம்பி, எதிர்பார்த்து எதிர்பார்த்து, ஏமாந்த நிகழ்ச்சிகள் தொடர்கதைகளாகி

விட்டன. எனவேதான், நோய்வாய்ப்பட்டாலும் சிங்கம் சிங்கம்தான் என்பது போல் யாம் எமது வீரமுழக்கங்களை சாதாரண முனகலாகவே வெளியிட்டு வருகிறோம்.

யாம் எண்ணற்ற தோல்விகளை தொடர்ந்து தாங்கிக் கொண்டு வருகிற காரணத்தினால்தான் மிகுந்த நிதானத்தோடும், அமைதியோடும் சமாதானப் போக்கோடும், பொறுக்கியெடுத்த சிலரைக் கொண்டு பொறுப்புமிக்க கட்டமைப்புக்களை உடைய இயக்கத்தைப் பொறுப்புடன் காத்து வருகிறோம். இனிமேல் இந்தப் பொறுப்பு தங்களுக்கும் உடையதாகின்றது. இந்த இயக்கத்தை விருப்போடும், பொறுப்போடும் என்றென்றும் காப்போம் நாம். நாம் இம்மண்ணுலகிலேயே மிகவும் தொன்மையான, மேன்மையான, திண்மையான, நுண்மையான, ஒண்மையான, உண்மையான, நன்மையான பதினெண்சித்தர்களின் சீவநெறி எனும் இந்துமதத்தின் தத்துவ வித்தாக, வாரிசுகளாகச் செயல்படுவோமாக. நமக்கு ஊரெங்கும் நண்பர்கள் உண்டு, உலகெங்கும் கிளைகள் உண்டு. வெற்றி நமதே, நாளை நமதே.

9) நண்ப! தங்களுடைய 15-11-86 நாளைய அஞ்சலை மாட்டுவேலம்பட்டியிலிருந்து எழுதி அனுப்பியதை இன்று 18-11-86இல் பல்வேறு அஞ்சல்களுக்கிடையில் சுமார் (20) இருபது அஞ்சல்களுக்கிடையில் படித்தவுடன் பெரிதும் கவரப்பட்டோம். எனவே, உடல்நலமில்லாத நிலையிலும், மின்சாரத் தொடர்பு அடிக்கடி அறுந்து போன போதிலும், பூசையறைக் குத்துவிளக்கு ஒளியிலும், மண்ணெண்ணெய் விளக்கு ஒளியிலும், மெழுகுவத்தி ஒளியிலும் மாற்றி மாற்றித் தொடர்ந்து எழுத முற்பட்டு உடல்நிலைப் பாதிப்பைப் பொருட்படுத்தாமல் நள்ளிரவு கடந்து இந்த அஞ்சலை எழுதுகின்றோம்.

நிறைந்த உணர்வு கலந்து விளங்கும் அறிவுச் சுடரே! உன்னைப் பெரிதும் வாழ்த்தி இந்த அஞ்சலை விடுக்கின்றோம். நீ துணிந்து மேடையில் பேசிய கருத்துக்களுக்காக தொடர்ந்து குட்டப்பட்டும்,

தாக்கப்பட்டும், தனிமைப்படுத்தப்பட்டும், அடக்கி ஒடுக்கப்பட்டதை அறிந்தோம். நீ குரல்வளை நெறிக்கப்பட்ட குயிலாக, சிறகொடிக்கப்பட்ட வானம்பாடியாக, காலொடிக்கப்பட்ட மயிலாக, ... உன் ஆற்றல் ஒடுக்கப்பட்டு, உன் நெஞ்சம் ஒடுக்கப்பட்டு விட்டதை உன் ஊமைவிழிகள் உணர்த்தி விட்டன. இனிமேல் நீ ஊமையாகவும் வாழத் தேவையில்லை; ஆமையாகவும் வாழத் தேவையில்லை இனி. நீ உன்னுடைய சிந்தனைத் தெளிவால் மலைச்சாரலில் சீறிப் பாய்ந்திடும் வேங்கையாக மாறிடுவாய். உன் சீற்றம் கண்டு துள்ளிப் பாய்ந்தோடும் புள்ளிமான் கூட்டமாக அறிவற்ற புல்லர்களும், கருத்துக் குருடர்களும் ஓடிடுவார்கள், ஓடிடுவார்கள், ஓடிடுவார்கள், ஓடியே போய்விடுவார்கள். உனக்குக் கவலையே வேண்டாம் இனி.

10) நண்ப! சுடுபாலைக் குடித்த பூனை குளிர்ச்சி மிக்க தயிரைக் கண்டால் கூட மிரண்டு ஓடுவது போல தனிமைப்பட்டுவிட்ட நீ எமது கருத்துக்களைக் கண்டு வெருண்டு மருண்டிருக்கிறாய். வருந்துகிறோம். அதாவது நீ உனது 15-11-86 நாளைய அஞ்சலில் 5ஆம் பக்கத்தில் 3வது பாராவில் (குறிப்பு: தாங்கள் இனிமேல் எமது அஞ்சலில் இருப்பது போல் அஞ்சலோ, கட்டுரையோ, நூலோ எழுதினால் ஆரம்பம் முதல் இறுதி வரை ஒவ்வொரு பாராவிற்கும் வரிசை எண் குறிப்பிட்டு எழுதிப் பழகுங்கள். அதுதான் நம்மைக் காப்பாற்றும்) கீழ்க்கண்ட வரிகளை எழுதியுள்ளாய்:

*“தனிமனித வளர்ச்சியைக் குறை கூறியது அறிக்கை. தனிமனித வளர்ச்சியும் தேவை என்று கருதுபவனாக நான் உள்ளேன் ஐயா!”*

இப்படித் தாங்கள் எழுதியிருப்பது மிக வியப்பாக இருக்கிறது. எம்முடைய கட்டுரையில் இது போன்ற கருத்து எம்மால் வெளியிடப்படவில்லை. நண்ப! யாம் மிகத் தெளிவாக;

♦ தனிமனித விழிச்சி தேவை! தனிமனித எழுச்சி தேவை! தனிமனித மலர்ச்சி தேவை! தனிமனித வளர்ச்சி தேவை! தனிமனிதச் செழுச்சி தேவை!

♦ தனிமனிதராலேயே சமுதாயப் புரட்சியைச் செய்யமுடியும்.

♦ தனிமனிதராலேயே அரசியலில் மறுமலர்ச்சியை உண்டாக்க முடியும்.

♦ தனிமனித வரலாறே ஒரு காலத்தின் வரலாறு.

♦ தனிமனிதராகிய எமது வரலாறே எமது காலத்தின் உலக வரலாறு.

♦ தனிமனிதராகிய எமது வெற்றியே எமது மொழியின் வெற்றியாக, இனத்தின் வெற்றியாக, நாட்டின் வெற்றியாக இருந்திடும்.

♦ தனிமனிதராலேயே மிகப்பெரிய மாற்றங்களைச் செய்யமுடியும். கார்ல் மார்க்சு என்ற தனிமனிதரின் தத்துவமே ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களின் வறுமையையும், வெறுமையையும் வெல்லும் சத்தியைத் தோற்றுவித்திருக்கிறது.

♦ தனிமனிதக் கனவுகளே நமது கலைக்கோயில்கள்.

♦ தனிமனிதச் சாதனைகளே நமது புராண இதிகாசங்கள்.

... ... முதலிய எண்ணற்ற கருத்து வாசகங்களை உருவாக்கி முழக்கி வரும் எம்மைப் புரிந்து கொள்ளுங்கள், புரிந்து கொள்ளுங்கள், புரிந்து கொள்ளுங்கள். யாம் தனிமனித வளர்ச்சிக்குத் தடை விதிப்பவரேயல்ல, அல்ல, அல்ல. எனவே, எமது கருத்து வாசகங்களே உமது ஐயத்துக்கு விளக்கமாக அமையட்டும், அமையட்டும், அமையட்டும்.

(11) நண்ப! தாங்கள் தங்கள் குடும்ப அங்கத்தினர்களின் முழு விவரங்களையும் தெளிவாக எழுதி அனுப்புங்கள். தங்களுடைய எந்தக் குழந்தைக்குக் கார்த்திகையின் எந்த வாரத்தில், எந்த இடத்தில், எந்த நேரத்தில் முடி இறக்கப் போகிறீர்கள் என்ற

விவரத்தை நிறைவாக எழுதி அனுப்புங்கள். எமது வாழ்த்தை இப்போதே தெரிவித்துக் கொள்கிறோம். இனிமேல், தெளிவாகவே எதையும் நமது இயக்கத்தவர் அனைவருக்கும் எழுதிச் செயல்படுத்துங்கள். எப்படியாவது ஒரு சிலராவது தங்களுக்குத் துணையாக வந்து செயல்படுவார்கள். கவலை வேண்டாம். இனியும் தங்களுக்கு அலைகடலிடைத் துரும்பு போன்ற நிலை ஏற்படாது. விரிவஞ்சி நிறைவு செய்கிறோம்.

அன்பு

**தலைவர், குருதேவர், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், குவலய குருபீடம், அரசயோகி, அருளாட்சி நாயகம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

சேலம் மாவட்ட வளர்ச்சிப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைக்கிறோம். விரிந்தும் விரைந்தும் செயல்படுக. குருவாணை!

**நகல் எழுதியவர்: ஆதரவாளர்: K.நாராயணன்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: திரு K.நாராயணன் அவர்கள் எழுதிய கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

# <u>சமயத் திருப்பணி மடல்</u>

அருள்மிகு திருச்சி சுவாமிகள் (இராசராசேசுவரி கோயில், கங்கணப்பள்ளி, பெங்களூர், கருநாடக மாநிலம்) அவர்கள் சமூகத்திற்கு ஞாலகுரு சித்தர் கருவூரார் விடுத்துக் கொள்ளும் '**<u>சமயத் திருப்பணி மடல்</u>**'.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே, அம்மையப்பனின் அருட்துணையே என உணர்ந்து இறைப்பணியாற்றும் நமது இந்து மதத்தவர்களுக்கிடையே நல்லுறவும், நல்குரவும் தோழமைப் பிணைப்போடும், தொண்டு நோக்கோடும் வளர்க்கப்பட்டிடல் வேண்டும். அதுவே பல்வேறு காரணங்களால் தளர்ச்சியுற்று, வளர்ச்சி குன்றி, நலிவுற்ற நிலையில் இருக்கும் நமது மதத்தவர்களை விழிச்சியும், எழுச்சியும், கிளர்ச்சியும் பெற்று வளவளர்ச்சிக்குரிய முயற்சிகளில் ஈடுபடச் செய்திடும். அப்பொழுதுதான் உலக மதங்கள் அனைத்திற்கும் தாயாகவும்; உலக அறிவியல்களுக்கும், கலைகளுக்கும் கருவாகவும்; சமூக விஞ்ஞானமாகவும்; தனிமனித வாழ்வியல் தத்துவமாகவும்; குடும்ப வாழ்வியல் சித்தாந்தமாகவும்; மானுடவியலைப் பயன்படுத்தும் வேதாந்தமாகவும்; அரசியல் வித்தகங்களுக்கு வித்தாகவும், நாற்றுப் பண்ணையாகவும் விளங்குகின்ற நமது இந்துமதத்தை மீண்டும் மறுமலர்ச்சியும், வலிமைச் செழிச்சியும், ஆட்சி மீட்சியும் பெற்றிடுமாறு செய்ய முடியும்! செய்ய முடியும்! செய்ய முடியும்!

2) அருள்மிகு பெரியீர்! இந்துமதத்தின் பெயரால் உள்ள இயக்கங்கள், கட்சிகள், கழகங்கள், மன்றங்கள், குழுக்கள், கூட்டங்கள், சங்கங்கள், சபைகள், ..... முதலியவை அனைத்துமே <u>ஏறத்தாழ</u> செயல்படுகின்ற தத்துவத்தில் ஒரே மாதிரியான நோக்கையும், போக்கையுமே பெற்றிருக்கின்றன. குறிப்பாகச் சொல்லப் போனால், மேற்படி அனைத்து வகையான நிறுவனங்களும் இந்துமதத்தால் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு

செயல்படுவனவாக இருக்கின்றனவே தவிர; தங்களால் இந்துமதத்திற்கு மறுமலர்ச்சியோ, வளர்ச்சியோ ஏற்பட வேண்டும் என்ற உணர்வோடு செயல்படுவனவாக இல்லை. எனவேதான், இந்துக்களுக்குரிய இந்தியாவின் சமயநிலைகளிலும் சரி, சமுதாயநிலைகளிலும் சரி, அரசியல்நிலைகளிலும் சரி இந்துமதம் அனாதையாக, அன்னியமானதாக, அநீதிகளை அனுபவிப்பதாக ஆகிவிட்டது.

இன்னும் சொல்லப் போனால், இந்துமதம் தன்னுடைய சொந்த நாட்டிலேயே தன்னுடைய உரிமைக்காகவும், பெருமைக்காகவும் குரலெழுப்பிக் கூப்பாடு போடவும், போராட்டங்கள் நிகழ்த்திப் போரிடவும் நேரிட்டு விட்டது! நேரிட்டு விட்டது! நேரிட்டு விட்டது! இப்படிப்பட்ட பழிநிலையை, அழிநிலையை, இழிநிலையை, ஒழிநிலையை எண்ணிப் பார்க்கத் தயாராக இல்லை மேற்படி நிறுவனங்கள். <u>அவர்கள் எல்லோருமே பதவிச் சண்டைகளிலும், புகழ் வெறிகளிலும், உலகியல் போட்டாபோட்டிகளிலுமே இந்துமதம் என்ற பேரைப் பயன்படுத்திக் கொள்ளும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்</u>.

ஏறத்தாழ இதேநிலைதான் சாமியார்கள், குருமார்கள், குருக்கள்கள், குருதேவர்கள், குருபீடங்கள், ஆச்சாரியார்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகள், அருட்சித்தியாளர்கள், ஆன்மீகக் கலைஞர்கள், சமயப் பெரும்புலவர்கள் முதலிய அனைவரிடையிலும் நிலவுகிறது. எனவேதான், இந்த நாட்டை இந்துமதத் துரோகிகளும், விரோதிகளும், நாத்திகர்களும் மிகச் சிறப்பாக, எளிதாக நேரடியாகவும், மறைமுகமாகவும் தங்களுடைய விருப்பம் போல் ஆளத் தொடங்கி விட்டனர்.

எனவேதான், இந்துமதத்தின் தந்தை என்று கூறிக் கொள்ளும் உரிமையையும், பெருமையையும் உடைய பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய யாம் இனியும் இலைமறை காயாக இருக்கத் தேவையில்லை என்று முடிவெடுத்து இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலம் வெளிக் கிளம்பிச் செயல்பட ஆரம்பித்திருக்கிறோம்.

3) பேரருட் பெருந்தகையீர்! யாம், இந்துமத நிறுவனங்கள் அனைத்துடனும் தொடர்பு கொண்டு எம்மாலியன்ற அளவு மத மறுமலர்ச்சிக்கும், மத வளவளர்ச்சிக்கும், மத ஆட்சிமீட்சிக்கும் பாடுபட்டு வருகிறோம். எமது பணிகள் முதலில் இந்துக்கள் தங்களுடைய மத வரலாறு, மதத் தத்துவம், மதச் சித்தாந்தம், மத மறை, மத முறை, மத நெறி, மத வேதாந்தம், மதக் கலைகள், மத அறிவியல்கள், ... முதலியவற்றை காலக்கணக்கீட்டு அடிப்படையில் (With a Chronological Approach) முறையாகவும், நிறையாகவும் கற்றுத் தேர்ந்து தெளிந்திடல் வேண்டும்.

இன்னும் சொல்லப் போனல் **ஒவ்வொரு இந்துவும் தன்னுடைய இந்துமதம் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது? எவரால் தோற்றுவிக்கப்-பட்டது? எவரெவரால் வளர்க்கப்பட்டது? எந்த மொழியை மூலமொழியாக, பூசைமொழியாக, அருளுலக ஆட்சிமொழியாகப் பெற்றிருந்தது? என்னென்ன காரணங்களால் தாழ்ச்சியுற்றது? அல்லது எவரெவரால் வீழ்ச்சியுற்றது? எப்படியெப்படி சூழ்ச்சிகளுக்கு இரையாயிற்று? என்னென்ன காலக்கட்டங்களில் என்னென்ன மதங்களை ஈன்றெடுத்தது? எத்தனையெத்தனை அருளாளர்களை தோற்றுவித்தும் தோல்விகளையே ஏற்றது? ... என்பன போன்ற வினாக்களுக்கு** மிகச் சிறப்பான, தெளிவான, வலுவான இலக்கியச் சான்றுகளோடும், ஊன்றுகளோடும், பதினெண்சித்தர் பீடம் பாதுகாத்து வரும் செய்திகளோடும் கூடிய விடைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும், தெரிந்து கொள்ள வேண்டும், தெரிந்து கொள்ள வேண்டும். <u>அப்பொழுதுதான் இந்துக்களின் இருண்ட காலமும், இந்துக்களின் அரண்ட காலமும், மிரண்ட காலமும், வறண்ட காலமும் மாறுவதற்கு வழி பிறக்கும், வழி பிறக்கும், வழி பிறக்கும்.</u>

அதுவும் இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர் பீடத்தின் நெடிய பெரிய பாரம்பரிய வாரிசே வெளிப்பட்டுச் செயல்படும் இத்தருணத்தில் இந்துக்களின் தலைவர் முதல் தொண்டர் வரை முழுமனதோடு முழு ஆதரவைத் தந்தால்தான் இந்துமதத்தை நிலைநிறுத்த

முடியும். இல்லையேல், இந்துமதம் *வலையில் அகப்பட்ட மான் போல* அல்லல் நிலையில்தான் இருக்க வேண்டும், இருக்க வேண்டும், இருக்க வேண்டும்.

4) அருந்தவத்தீர்! யாம், பிற மதங்களைக் குறை கூறவோ, குற்றம் சாட்டவோ, கடுமையாக விமரிசிக்கவோ தயாராக இல்லை; அதில் எமக்கு நம்பிக்கையும் இல்லை. ஏனெனில், எமக்கு முன்னால் வாழ்ந்து சென்ற பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தங்களுடைய "1) கருவாக்கு, 2) குருவாக்கு, 3) தருவாக்கு, 4) திருவாக்கு, 5) அருள்வாக்கு, 6) மருள்வாக்கு, 7) கருவாக்கியம், 8) குருவாக்கியம், 9) தருவாக்கியம், 10) திருவாக்கியம், 11) அருள்வாக்கியம், 12) மருள்வாக்கியம், 13) கருவாசகம், 14) குருவாசகம், 15) தருவாசகம், 16) திருவாசகம், 17) அருள்வாசகம், 18) மருள்வாசகம் எனும் பதினெட்டிலும் மிகத் தெளிவாகப் <u>பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதத்**தை இந்துக்கள் புரிந்து விரும்பியேற்று நடைமுறைப்படுத்தச் செய்தால் போதும்; மாற்று மதங்களாலும், வேற்று மதங்களாலும், துரோகிகளாலும், விரோதிகளாலும், கோழைகளாலும், கூலிகளாலும் இந்துமதத்திற்கு விளையும் அனைத்து வகையான பாதிப்புகளும் தாமே அகன்று அழிந்திடும். **இதற்காகப் போராட்டமோ, போரோ தேவையில்லை**</u>" என்று கூறிச் சென்றுள்ளார்கள்.

எனவேதான் யாம் நமது இந்துக்களைத் தங்களுடைய பழைய பயன்மிகு கொள்கைகளையும், கோட்பாடுகளையும், சடங்குகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், மரபுகளையும், ஒழுகலாறுகளையும் முயன்று விரும்பித் தேடித் தெரிந்து புரிந்து செயலாக்கி வாழுமாறு வேண்டி வருகிறோம். இதற்குத் தேவையான 1) அத்திறங்கள், 2) சாத்திறங்கள், 3) சூத்திறங்கள், 4) தோத்திறங்கள், 5) நேத்திறங்கள், 6) வேத்திறங்கள், 7) அத்திரங்கள், 8) சாத்திரங்கள், 9) சூத்திரங்கள், 10) தோத்திரங்கள், 11) நேத்திரங்கள், 12) வேத்திரங்கள், 13) அத்தரங்கள், 14) சாத்தரங்கள், 15) சூத்தரங்கள், 16) தோத்தரங்கள், 17) நேத்தரங்கள், 18) வேத்தரங்கள் எனும் பதினெட்டையும் பதினெண்சித்தர் பீடத்தின்

பன்னிரண்டாவது பீடாதிபதியாகிய யாம் தேர்ந்தெடுக்கப்பட்ட நல்ல பான்மையுடைய அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் மூலம் இந்துக்களுக்கு வழங்கி வருகிறோம்.

மேலும், எம்மால் முடிந்தவரை *பொய்யான ஹிந்துமத* மாயைகளிலிருந்தும், சூழ்ச்சிகளிலிருந்தும், கோரப்பிடிகளிலிருந்தும், வெறிகளிலிருந்தும், மயக்கங்களிலிருந்தும், தவறுகளிலிருந்தும் மக்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காகப் பயிற்சி பெற்ற அருளாளர்களைத் தயாரிக்கத் தமிழகத்திற்குள் சென்னையில் கருகுலமும், மதுரையில் குருகுலமும், சேலத்தில் தருகுலமும், ஆற்காட்டு வேலூரில் திருகுலமும் உலைக் கூடங்களாக உருவாக்கி இரவு பகலாகச் செயல்படுகிறோம் யாம்.

இன்றைய உலகியல்படி நன்கு படித்தவர்கள், பட்டங்கள் பெற்றவர்கள், பலநூறு ரூபாய் ஊதியம் பெறக் கூடியவர்கள், மாணுக்கர்கள், ... எனப்படுபவர்களை ஆயிரக்கணக்கில் திரட்டி அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்வீரராக ஆக்கியிருக்கிறோம். இவர்கள் பட்டிதொட்டிகள், குக்கிராமங்கள், சிற்றூர்கள், பேரூர்கள், பெருநகரங்கள் என்று அனைத்து இடங்களுக்கும் சென்று அருளை அநுபவப் பொருளாக வழங்கி; மக்களின் அருந்துயர்களையும், அல்லல்களையும், அவலங்களையும் அகற்றிடுவதன் மூலம் இந்து மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டிடுகிறார்கள்.

5) இந்துமதப் பத்திரப் பெரியோய்! பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதம்** மீண்டும் வடிவப்பட்டு வாழ்வுற்றிட்டால்தான் இந்துமதத்தின் பெயரால் உள்ள மடமைகளும், அறியாமைகளும், புரியாமைகளும், மூடநம்பிக்கைகளும், குருட்டுப் பழக்கவழக்கங்களும், அண்டப்-புளுகுகளும், ஆபாசக் கற்பனைகளும், முதலாளித்துவப் போக்கும், சுரண்டலும், ஏமாற்றும், ... முழுமையாக இந்துமதத்திலிருந்து அகற்றப்பட்டிடும், அகற்றப்பட்டிடும், அகற்றப்பட்டிடும்.

அப்பொழுதுதான் (*1988இல்*) இன்றைக்கு 43,73,088 ஆண்டுகளுக்கு முன்னர் கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தில்;

விண்வெளியிலிருந்து இம்மண்ணுலகுக்கு வந்த பதினெண்சித்தர்களால் அவர்களுடைய அமுதத் தாய்மொழியான அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியான தெய்வீகத் தமிழ்மொழியில் அருளிய இந்துமதத்தை மீண்டும் மலர்ச்சி நிலைக்கும், வளவளர்ச்சி மிகு செழுச்சி நிலைக்கும், ஆட்சி நிலைக்கும் உரியதாக்கிட முடியும், உரியதாக்கிட முடியும், உரியதாக்கிட முடியும்.

மேலும், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகாசன்னிதானம் பதிணோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களின் கணக்குப்படி கி.பி.1992 முதல் 1996க்குள் இந்துமத அருளாட்சி அமைந்திடும். அதுவே உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை நல்கிடும். மேலும், இந்துமத அருளாட்சியால்தான், அதாவது பதினெண்சித்தர்களின் சீவநெறி-யெனும் சித்தர்நெறியான இந்துமதத்தின் அருளாட்சியால்தான், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்க முடியும் என்ற பேருண்மை பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் அரச பாரம்பரியங்களிலும் தெளிவாக விளக்கி உரைக்கப்படுகின்றன.

எனவேதான், அம்மாபெரும் பொறுப்பை ஏற்றிருக்கும் யாம், ‘இதை வெளியே சொன்னால் தலைவெடித்து விடும்’ என்று தடை விதிக்கப்பட்டுள்ள அருளுலக மறை உண்மைகளைக் கூட தாராளமாக இலவச வெளியீடுகளாகவும்; ஐந்து புதிய காசுகள் (நயா பைசா) முதல் ரூபாய் பதினைந்து வரை விலையுள்ளதாகவும் எண்ணற்ற வெளியீடுகளை அறிக்கைகள், புத்தகங்கள் என்று வெளியிட்டு வருகிறோம். இவற்றில் கைவசமுள்ளவற்றை இத்துடன் தங்களுக்கு அனுப்பியிருக்கிறோம். இந்நிலை மட்டுமின்றி யாம் எம்மால் முடிந்தவரை எமது ஓய்வுக்கும், வாய்ப்பு வசதிக்கும் ஏற்ப தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் சுற்றுப்பயணங்கள் செய்து அருளுரை, அறிவுரை, அருளார்ந்த அறிவுரை, அறிவார்ந்த அருளுரை ... வழங்கி கருத்துப் பணியாற்றி வருகிறோம்.

8) அருந்தவத்தீர்! யாம், எமது காலத்தில் இந்துமதத்தின் கருவூலச் செல்வங்களாக இருக்கின்ற 1) நேமம், 2) நியமம், 3) நிடதம், 4) நிட்டை, 5) நீதி, 6) சுருதி, 7) ஆரணம், 8) ஆகமம், 9) மீமாம்சை, 10) ஓமம், 11) ஓகம், 12) யாகம், 13) யக்ஞம், 14) வேள்வி, 15) தவம், 16) சித்தம், 17) ஞானம், 18) மோனம் என்னும் பதினெட்டையும் மக்கள் அநுபவப் பொருளாக அடைந்திடச் செய்ய வேண்டும் என்பதே எமது குறிக்கோள்.

ஆனால், தரமுடையார்க்குத் திரமிருப்பதில்லை, திரமிருப்பார்க்குத் திறமையிருப்பதில்லை, திறமையிருப்பார்க்குத் தீர வீரமிருப்பதில்லை. எனவேதான், யாம் சமயக்குரவர் திருஞானசம்பந்தர் போல் ஒரு மிகப்பெரிய தொண்டர் கூட்டத்தை எம் பின்னால் திரட்டியிருந்தும் நம் நாட்டின் சமய சமுதாய அரசியல் நிலையை அனுசரித்து நீள் தவத்தில் நாள் போவது தெரியாமல் இருக்கிறோம். தங்களைப் போன்றோரின் பெருந்துணை கிடைத்தால்; வாழையடி வாழையென வருகின்ற திருக்கூட்ட மரபில் வந்தவர் கணக்கற்றோர் எம் துணைக்குக் காத்திருந்தும், அவர்கள் செயலாற்ற இருக்கின்ற நிலையில் மாபெரும் மாற்றம் விளைந்திடும். தங்களின் திருவுளம் அறிய விரும்புகிறோம். அருளுலகில் இருக்கும் அனைவரும் நட்போடும், தோழமையோடும் இணைந்து செயல்படும் பொற்காலம் நமது இந்துமதத்திற்கு நம் காலத்திலாவது ஏற்படட்டும்.

தங்களைப் பற்றி சென்னை வேப்பேரி வீர சுப்பைய ஞானதேசிகேந்திர சுவாமிகள் மடத்துத் தலைவர் வித்தியானந்தகிரி சுவாமிகள் கூறியதால் இம்மடல் விடுக்கப்படுகின்றது. பதிலை எதிர்பார்க்கிறோம்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

**//உண்மை நகல்//**
**// இதன் மூல நகல்: கையெழுத்துப் பிறதியாக இருந்தது. யாருடைய கையெழுத்து என்று அறிய முடியவில்லை. //**

# மதத்தின் பெயரால் உள்ள கட்சிகள் பற்றி குருதேவர் கூறிய கருத்துக்கள்

மதக் கட்சிகளுக்குத் தலைமை தாங்குபவர்களும், தொண்டர்களும் அன்றாடம் பூசை செய்பவர்களாகவும்; பேய் பிசாசு காற்று கருப்பு முதலியவைகளைச் சந்திக்கும் திறமுடையவர்களாகவும்; கைரேகையையும், பிறப்பியலையும், எண்ணியலையும், மனையடிச் சாத்திறத்தையும், கனு சாத்திறத்தையும், புராண இதிகாசங்களையும் பற்றிச் சிந்திக்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மதம் என்கின்ற துறைக்கு உலகம் முழுதும் ஒளியும், வலிமையும் ஏற்பட்டிடும்! ஏற்பட்டிடும்! ஏற்பட்டிடும்!

மதத்தின் பெயரால் உள்ள கட்சிகளுக்கிடையிலும், தலைவர்களுக்கிடையிலும்; சாதாரண அரசியல்வாதிகளுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் இடையில் இருப்பது போல் போட்டி, பொறாமை, பகைமை, அகம்பாவம், ஆணவம், விளம்பர ஆசை, ஆடம்பர ஆசை, ஊர்வல ஆசை, விழாக்கோல ஆசை முதலியவை இருக்கக் கூடாது! இருக்கக் கூடாது! இருக்கக் கூடாது! இருக்கவே கூடாது!

**// 26-01-1987இல் குருதேவர் அவர்கள் எழுதிய அஞ்சலில் இருந்த இரண்டு பத்திகள். //**

“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”
- குருபாரம்பரிய வாசகம்.



இப்படத்தில் இருப்பவர்தான் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் (கி.பி.785 - 1040).

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam Trust,** (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org https://gurudevar.org
https://induism.org https://books.gurudevar.org
Email: indhuism@gmail.com